மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்த மன்றத்தின் முன்னால் இருக்கும் பிரச்சினை நம்முடைய மாநிலத்தில் மின்சார உற்பத்திக் கழகத்தை அமைக்கும் செயற் குறிப்பு பற்றியதாகும். மின்சாரம் உற்பத்தி செய்ய நிதி தேவை. அந்த நிதியை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டும். அதைப் பெறமுடியாது என்னும்போது கார்ப்பரேஷனை ஏற்படுத்து வதில் பயன் இல்லை என்று கருதி அந்த யோசனை ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது. கர்நாடகத்தில் இதுபோன்ற மின் உற்பத்திக் கழகம் செயல்பட்டு வருகிறது என்று குறிப்பு இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம் : கோவையில் இருக்கும் தனியார் துறை நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் தனியார் துறையில் தெர்மல் ஸ்டேஷன் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி இப்போது என்னிடம் குறிப்பு இல்லை. யோசனை வந்தால் அரசுக்குத் தெரியப்படுத்தலாம்.

Ambathur Industrial Estate

*685 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) the number of Industrial Units that have been started in the Industrial Colony at Ambathur Township during 1973; and

(*b*) the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) பொறியியல், தானியங்கி வண்டி உதிரி பாகங்கள் முதலியவை களைத் தயாரிக்கும் 51 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : எவ்வளவு செலவில் இது கட்டப்பட்டிருக்கிறது ? எலக்ட்ரானிக் கருவிகள் செய்யக்கூடிய மெஷின்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வாடகைக்கு இடம் கொடுப்பதிலே—

subsidised rent at 13 paise per square foot is charged as against the economic rent of 19 paise per square foot. In respect of technocraft schemes, rent is charged at the rate of 10 paise per squae foot.

இதிலே நான் இப்போது சொன்னது இண்டஸ்ட்ரியல் யூனிட்ஸ் பற்றியது.
automobile spare parts, manufacture of plastics, light engineering machines, agricultural implements
என்ற இந்த வகையான தொழில்களை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மாதிரி இண்டஸ்ட்ரியல் யூனிட்சை சிறு தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்கிறோம். அதே நேரத்தில் அண்மையிலே நான்கு மாத மின்சார டெபாசிட் வேண்டுமென்று கேட்ட காரணத்தால் பல சிறு தொழில் நிறுவனங்கள் டெபாசிட்டைக் கட்ட முடியாமல் திண்டாடுவதாகப் புகார் வந்திருக்கிறது. அப்படியானால் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அவர்களுடைய சிரமத்தைத் தணிக்க ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெபாசிட் தொகை கட்டுவதில் உள்ள சிரமங்களைப் பற்றி இந்த மன்றத்திலும் மேல் சபையிலும் சொன்னார்கள். சிறு தொழில் அதிபர்களும் என்னைச் சந்தித்துச் சொன்னார்கள். அந்தத் தொகையை இன்ஸ்டால்மென்ட் பேமென்டாகக் கட்டலாம் என்று மின் வாரியத்தின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Industrial Complex at Manamadurai

*686 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration to locate an industrial complex near Manamadurai in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மானமதுரை அருகில் தொழில் தொகுதி ஒன்றை உருவாக்க உத்தேசித்துள்ளது. இத்தொழில் தொகுதிக்குத் தேவையான பட்டா நிலங்களை ஆர்ஜிதப்படுத்தவும் புறம்போக்கு நிலங்களை மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சோணையா : மானமதுரை அருகில் இந்தத் தொழிற் தொகுதி எவ்வளவு ரூபாயில் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறது ? அந்த வேலை இன்னும் தொடங்கப்படவில்லை எப்போது அதைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?